பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
24 08 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யுக்ரைன் பயணம், அந்நாட்டிற்கு அமைதியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

2. விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகளின் தன்மைகளை ஆய்வு செய்து முறைப்படுத்த அமைச்சர்கள் நிலையிலான குழுக்களை ஏற்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. நேபாளத்தில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

4. அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யுக்ரைன் பயணம், அமைதியை அடிப்படையாக கொண்டது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் யுக்ரைனில் நிலவும் சூழலை சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் செயல்படும் எந்த நாட்டையும் அமெரிக்கா வரவேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வலுவான நட்பு நாடாக இந்தியா திகழ்வதாக அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜான் கர்வி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, யுக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை, விரைவில் அந்நாட்டிற்கு அமைதியை கொண்டு வரும் என்று எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள தாம் எதிர்பார்ப்புடன் இருப்பதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், யுக்ரைன் – ரஷ்யா இடையே அமைதியை ஏற்படுத்த இந்தியா விரும்புவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

யுக்ரைனும் ரஷ்யாவும் பேச்சுவார்த்தை மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியா தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு ஆதரவாக இந்தியா செயல்பட்டு வருவதை குறிப்பிட்ட திரு. ஜெலன்ஸ்கி, யுக்ரைனும், ரஷ்யாவும் அமைதிக்கான உச்சிமாநாட்டை நடத்துவதற்கு இந்தியா விரும்புவதாக கூறினார்.

இதுதொடர்பாக, கடந்த ஜூன் மாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற அமைதி பேச்சுவார்த்தையை அவர் சுட்டிக்காட்டினார்.

இதில் 90 நாடுகள் பங்கேற்றதாகவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு எல்லையும் மதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இந்தியா வலியுறுத்தி வருவதாக திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அரசின் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களில் இந்திய பாரம்பரிய ஆடைகளை அணிவது தொடர்பான மாதிரிகளை வடிவமைக்குமாறு மத்திய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மருத்துவக் கல்லூரி நிறுவனங்களின் தலைவர்களுக்கும், மருத்துவமனைகளின் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவின் புகழ்மிக்க பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சகம் கூறியுள்ளது.

அந்தந்த மாநிலங்களின் கலாச்சார ஆடைகளை சிறப்பிக்கும் வகையில் புதிய வகை ஆடைகள் வடிவமைக்கப்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகளின் தன்மைகளை ஆய்வு செய்து முறைப்படுத்த அமைச்சர்கள் நிலையிலான அளவிலான குழுக்களை ஏற்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற விழாவில் பேசிய மத்திய ஆலோசகர் குழுவின் தலைவர். ஜி. கமலா வர்தனராவ், நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன் காரணமாக ஏற்படும் நீண்டகால நோய்கள் குறித்த விழிப்புணர்வும் மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நடமாடும் ஆய்வகங்களை பரவலாக்க வேண்டும் என்றும் நுகர்வோர் பயனடையும் விதத்தில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கமலா வர்தனராவ் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் அடுத்த மாதம் 18, 25 மற்றும் அக்டோபர் 1ஆம் தேதிகளில் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுவதை ஒட்டி, அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜம்மு, உதம்பூர் மற்றும் தில்லி ஆகிய இடங்களில் உள்ள நிவாரண முகாம்களில் வசிக்கும் மக்கள், வாக்களிப்பதற்கு வசதியாக சிறப்பு வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்று ஜம்மு காஷ்மீரின் தலைமைத் தேர்தல் அதிகாரி பி.கே. பொலே தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மக்கள் தங்களது வாக்குகளின் முக்கியத்துவத்தை அறிந்து, ஜனநாயகத்தில் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் தேர்தல் ஆணையத்தின் **cvigil, suvidha, voter helpline, knowyourcandidate** ஆகிய செயலிகள் செயல்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

18ஆம் தேதி நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவு ஏழு மாவட்டங்களில் அடங்கிய 24 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெறும்.

இதற்காக அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

மஹாராஷ்ட்ராவிலிருந்து நேபாளத்திற்கு சென்ற சுற்றுலா பேருந்து மார்ஷியாண்டி நதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

அந்த பேருந்தில் மொத்தம் 43 பேர் பயணம் செய்துள்ளனர்.

நதியிலிருந்து மீட்கப்பட்ட 16 பேர் காத்மண்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் இன்று உத்தரபிரதேசத்தில் உள்ள கோரக்பூருக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் இந்திய விமானப்படையின் விமானம் மூலம் நாசிக்-கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை இந்தியா கொண்டு வருவதற்கு இந்திய தூதரகம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

விடுதலைப் போராட்ட வீரர் ஜாஹித் ஷிவ்ராம் ராஜ்குருவின் பிறந்த தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராஜ்குருவின் துணிச்சல் மற்றும் தியாகம் மக்களுக்கு உத்வேகத்தை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் விடுதலைக்கான அவரது அர்ப்பணிப்பை என்றும் நினைவுகூருவோம் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை  11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இந்நிகழ்ச்சியை நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

அகில இந்திய வானொலியின் அனைத்து சமூக ஊடகங்களிலும் பிரதமரின் உரை ஒலிபரப்பப்படும் என்று மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

அனைத்து தரப்பு மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தமிழக அரசு, திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை பட்டியலிட்டார்.

பழநி தண்டாயுதபாணி திருக்கோவிலில் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவிலேயே மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஹைபிரிட் ராக்கெட் **Rhumi-I** இன்று சென்னைக்கு அருகே நடமாடும் ஹைட்ராலிக் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

சிறியவகையைச் சேர்ந்த இந்த ராக்கெட், இந்திய விண்வெளி வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல் கல்லை ஏற்படுத்தியுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் மயில்சாமி 26 செகண்டஸ்)

**space zone india** நிறுவனமும் **Martin** குழுமமும் இணைந்து உருவாக்கிய இந்த ஹைபிரிட் ராக்கெட், வெற்றிகரமாக ஏவப்பட்டு, மீண்டும் பூமிக்கு திரும்பியது.

காஸ்மிக் கதிர் வீச்சு புற ஊதா கதிர்வீச்சு மற்றும் காற்றின் தரம் உள்ளிட்ட வளிமண்டல நிலைகளை கண்காணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட செயற்கைக்கோள்களை இந்த ராக்கெட் சுமந்து சென்றது

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன், நடமாடும் ஹைட்ராலிக் ஏவுதளத்திலிருந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட், ஒரு தொழில்நுட்ப சாதனையாகும் என்று குறிப்பிட்டார்.

>>>>><<<<<

காஸா பகுதியில் உள்ள பாலஸ்தீன அகதிகள் முகாமில் மருத்துவ பணிகளை மேற்கொள்ள இயலாததன் காரணமாக, போலியோ தொற்று பரவும் வாய்ப்புள்ளதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூகவலைதளங்களில் செய்தி வெளியிட்டுள்ள ஐ.நா அகதிகள் நிவாரண முகாம் ஆணையத்தின் தலைவர் ஃபிலிப்பி லஸாரினி, காஸாவிற்கு மருத்துவ உதவிகள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அங்கு வைக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளுக்கான குளிர்பதன கிடங்குகள் சரியான முறையில் இயங்கவில்லை என்றும் கவலை தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-0, 6-3 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Rina Saigo-**வை வென்றார்.

>>>>><<<<<

சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் ஷிக்கர் தவான் அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா 'ஏ' அணி தனது இரண்டாவது இன்னிங்ஸின் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்புக்கு 149 ரன் எடுத்துள்ளது.

**Gold Coast** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆஸ்திரேலியா ஏ அணி முதல் இன்னிங்ஸில் 212 ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்ஸில் 260 ரன்னுக்கும் ஆட்டமிழந்து.

இந்தியா ஏ அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 184 ரன்.

>>>>><<<<<